06.04.2025

பிரசார் பாரதி, அகில இந்திய வானொலி, திருச்சிராப்பள்ளி

வணக்கம். ஆகாசவாணி. மாநில செய்திகள்

தலைப்பு செய்திகள்

- தமிழகத்திற்கு 8 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான சாலை, ரயில் திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திரமோடி ராமேஸ்வரத்தில் இன்று தொடங்கிவைத்தார்.
- நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு வசதிகள் மிகமுக்கிய பங்காற்றுவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.
- நேனோ உரங்கள் சர்வதேச அளவில் நாட்டின் நம்பகத்தன்மையை உறுதி செய்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.
- நாட்டிலேயே தமிழகம் பொருளாதார வளர்ச்சியில் தொடர்ந்து முன்னிலை வகிப்பதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை, நீலகிரி, ஈரோடு, சேலம், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.
- IPL 20-20 கிரிக்கெட் போட்டியில் ஹைதராபத்தில் இன்றிரவு ஏழரை மணிக்கு சன் ரைசர்ஸ் ஹைதராபாத் - குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

ராமேஸ்வரத்தில் இன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றியஅவர், கடந்த 10 ஆண்டுகளில் ரயில்வே, சாலை, குடிநீர், விமானம் மின்சாரம் உள்ளிட்ட துறைகளுக்கு மத்திய பட்ஜெட்டில் 6 மடங்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

புதிய ரயில் திட்டங்களால் ரயில்வே துறை நவீனப் படுத்தப்பட்டுள்ளதாக கூறிய பிரதமர், மாநிலங்கள் ஒன்றிணைந்து செயல்படும்போது நாடு வளர்ச்சி அடைவது மட்டுமல்லாமல், வலிமை மிக்கதாகவும் திகழும் என்றார்.

நாட்டின் ஒட்டுமொத்த திறனும் தற்போது வெளிப்படுவதாக பெருமிதம் தெரிவித்த பிரதமர், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு தமிழகத்தின் பங்கு முக்கியமானது என்றார்.

இன்று தொடங்கிவைக்கப்பட்ட புதிய பாம்பன் பாலத்தின் மூலம் ராமேஸ்வரத்திலிருந்து நாட்டின் பிற பகுதிகளுடனான சுற்றுலா, வர்த்தகம் உள்ளிட்டவைகள் மேம்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

தமிழகத்திலுள்ள லட்சக்கணக்கான சிறு விவசாயிகளுக்கு பிரதமரின் கிசான் திட்டத்தின் மூலம் 12 ஆயிரம் கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நாட்டின் வளர்ச்சியில் நீல பொருளாதாரத்திற்கு பெரும் பங்கு உள்ளது என்று கூறிய பிரதமர், மாநிலத்தில் மீன்வள கட்டமைப்புகளை மேம்படுத்த மத்திய அரசு தேவையான நிதியை வழங்கி வருவதாக தெரிவித்தார்.

மீனவர்களின் அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண மத்திய அரசு துணை நிற்கும் என்று தெரிவித்த பிரதமர், இதுவரை 3 ஆயிரத்து 700 மீனவர்கள் இலங்கையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழகத்திற்கு 8 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான சாலை, ரயில் திட்டங்களை பிரதமர் ராமேஸ்வரத்தில் பிரதமர் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்திற்கு 11 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

தொடர்ந்து பேசிய மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ், மாநிலத்தில் 77 ரயில் நிலையங்கள் மறுசீரமைக்கப்பட்டு வருவதாக கூறினார்.

பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் ரயில்கள் நாடுமுழுவதும் செயல்படுவதாக தெரிவித்தார்.

முன்னதாக ராமேஸ்வரம் புதிய பாம்பன் ரயில் பாலத்தை இன்று பிரதமர், 2 கிலோ மீட்டர் நீளமுள்ள பாம்பன் பாலத்தில் நாட்டின் முதல் செங்குத்து மேல்தூக்கி அமைப்பின் செயல்பாட்டை தொடங்கும் வகையில் ரயில் மற்றும் கப்பல் சேவையையும் பிரதமர் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இதனிடையே இலங்கையில் இன்றுகாலை தனது 3 நாள் அரசுமுறை பயணத்தின் நிறைவாக இந்திய உதவியுடன் கட்டமைக்கப்பட்ட மஹோவ - ஓமந்தை ரயில்வழித்தடத்தை, இலங்கை அதிபர் அனுர குமார திசநாயக உடன் இணைந்து தொடங்கிவைத்தார்.

பிரதமரின் இலங்கை பயணத்தின் மூலம் பாதுகாப்பு, எரிசக்தி, டிஜிட்டல் உட்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தமது இலங்கை பயணம் இருநாடுகளுக்கு இடையேயான உறவுகளுக்கு உத்வேகம் அளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா - இலங்கை இடையேயான ஆழமான கலாச்சார, ஆன்மீக உறவுகள் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

இந்திய விவசாய கூட்டுறவு சங்கத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் காரணமாக நேனோ யூரியா மற்றும் நேனோ DAP உரங்கள் உலகளவில் நாட்டின் நம்பகத்தன்மையை உறுதி செய்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் இச்சங்கத்தின் பொன்விழா நிகழ்ச்சியில் உரையாற்றியஅவர், நவீன ஆய்வக சோதனைகள் இச்சங்கத்தின் மூலம் நடைபெற்றுள்ளதாக கூறினார்.

சங்கத்தின் விதை ஆராய்ச்சி பிரிவையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

தொடர்ந்து திரு. அமித்ஷா இன்றுமாலை ஜம்முகாஷ்மீரின் பாதுகாப்பு நிலைமை குறித்து ஆய்வு செய்வதற்காக அங்கு செல்கிறார்.

3 நாள் பயணமாக காஷ்மீர் செல்லும் அவர், பாதுகாப்பு மறுஆய்வு கூட்டங்களில் பங்கேற்று தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், எல்லை தாண்டிய ஊடுருவல் முயற்சிகள் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து உள்துறை அமைச்சகம், ராணுவம், புலனாய்வு அமைப்புகள் உள்ளிட்ட துறைகளின் உயரதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

மேலும் வருடாந்திர அமர்நாத் யாத்திரைக்கான முன்னேற்பாடுகள் குறித்தும் அவர் ஆய்வு மேற்கொள்ள உள்ளார்.

காணொலி வாயிலாக பல்வேறு திட்டப் பணிகளையும் அமைச்சர் தமது பயணத்தின் போது தொடங்கிவைக்கவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

ராமநவமி

பகவான் ராமர் பிறந்த நாளான ஸ்ரீராமநவமி இன்று கொண்டாடப்படுகிறது.

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் உண்மை, தியாகம், தன்னலமற்ற அன்பு, தர்மம், அர்ப்பணிப்பு, மனிதகுல சேவை உள்ளிட்டவைகளை இந்நாள் நமக்கு எடுத்துரைப்பதாக கூறியுள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில் இந்நன்னாளில் அனைத்து முயற்சிகளிலும் வெற்றிபெற ஸ்ரீராமர் நம்மை வழிநடத்தட்டும் என தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி அயோத்தி ராம்லல்லாவில் சிறப்பு வழிபாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கும்பகோணம் அருள்மிகு ராமசாமி திருக்கோவிலில் ஸ்ரீராமநவமி தேரோட்டம் இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

நாட்டிலேயே தமிழகம் பொருளாதார வளர்ச்சியில் தொடர்ந்து முன்னிலை வகிப்பதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் உதகையில் 353 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையை இன்று திறந்துவைத்து பேசிய முதலமைச்சர், மாவட்டத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் 6 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

இதன்படி, கூடலூரில் 26 கோடியே 6 லட்ச ரூபாய் செலவில் 300 புதிய வீடுகள் அமைக்கப்படும்,

உதகையில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழங்குடியினர் அருங்காட்சியகம் மற்றும் ஆராய்ச்சி மையம், 20 கோடி ரூபாய் செலவில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகளை வெளியிட்டார்.

தொடர்ந்து அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் விழாவில் 727 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதுடன் முடிவுற்ற திட்டப்பணிகளையும் முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

துரைமுருகன்

தமிழக அரசு அனைத்து தரப்பினரும் மருத்துவ வசதிகளை எளிதில் பெறுவதற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் காங்கேயநல்லூரில் தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் ஒருகோடியே 20 லட்ச ரூபாய் மதிப்பில் கட்டப்படவுள்ள புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்திற்கு அடிக்கல்நாட்டி பேசியஅவர், இப்பகுதி மக்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் 200 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வரும் பென்ட்லான்ட் பன்நோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

அமைச்சர்கள்

தூத்துக்குடியிலிருந்து, திருச்செந்தூர் - உடன்குடி, ஆத்தூர் - வெள்ளக்கோவில், திருச்செந்தூர் - நாசரேத் ஆகிய புதிய வழித்தடங்களில் பேருந்து சேவைகளை மாநில கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திரு. அனிதாராதாகிருஷ்ணன் இன்று தொடங்கிவைத்தார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் கும்பகோணம் கோட்டம் சார்பில் 7 புதிய பேருந்து சேவைகளை மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்தில் தொடங்கிவைக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

திண்டுக்கல் வாய்ஸ்

கொடைக்கானல் மலைப்பகுதியில் கடந்த 4 நாட்களாக பெய்துவரும் மழை காரணமாக சாலைகளில் மரங்கள் விழுந்துள்ள நிலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் பல்வேறு மீன்வளர்ப்பு குளங்கள் அமைக்க ஆதிதிராவிடர் பிரிவை சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.

தர்மபுரி, அரியலூர் மாவட்டங்களில் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர் காலி பணியிடங்களுக்கு தகுதியுடையோர் வரும் 23-ம் தேதிக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச விளையாட்டு தினம் இன்று கடைபிடிக்கப் படுவதை ஒட்டி நாமக்கல் மாவட்டத்தில் உடல் திறன் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது.

இதில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ரேஷன் அரிசி கடத்தப்படுவதாக வந்த தகவலையடுத்து நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தணிக்கையில் ஆயிரத்து 500 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டு சிறு காவேரி பாக்கம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கிடங்கில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

கிருஷ்ணகிரி வாய்ஸ்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வனக்கோட்டத்தில், வனவிலங்குகளின் தண்ணீர் தேவையை நிறைவு செய்யும் வகையில் 75 இடங்களில் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை, நீலகிரி, ஈரோடு, சேலம், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டி பகுதிகளில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக அடுத்த 48 மணி நேரத்தில் தென்

வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும் என்றும் அம்மையம் கூறியுள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்துவரும் தொடர்மழை காரணமாக கும்பக்கரை அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதையடுத்து சுற்றுலா பயணிகளுக்கான தடை 3-வது நாளாக இன்றும் நீடிக்கிறது.

❖❖❖❖❖❖❖❖

கோவில்

திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவில் ஆழித்தேர் திருவிழா,

புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை முத்துமாரியம்மன் கோவில் தேரோட்டம்,

தென்காசி, காசி விஸ்வநாத சுவாமி திருக்கோவில் குடமுழுக்கு விழாவும் நடைபெறவுள்ளதால் இம்மாவட்டங்களுக்கு நாளை உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

குத்துச்சண்டை

பிரேசிலில் நடைபெற்ற உலக குத்துசண்டை போட்டியின் ஆடவர் 70 கிலோ எடை பிரிவில் இந்தியாவின் ஹித்தேஷ் தங்கபதக்கத்தையும், 65 கிலோ எடைபிரிவில் அபிநாஷ் வெள்ளி பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் ஹைதராபத்தில் இன்றிரவு ஏழரை மணிக்கு சன் ரைசர்ஸ் ஹைதராபாத் - குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖